### தினசரி சந்தை நிலவரம் - கோவை மாவட்டம் ரொட்டிக் கவுண்டனூர்

ஆறுச்சாமி

ரொட்டிக் கவுண்டனூர்

கோவை மாவட்டம்

செல்: 9715812197



ஆறுச்சாமி என்ற நான் கோவை மாவட்டம் ரொட்டிக் கவுண்டனூர் என்ற ஊரைச் சேர்ந்த விவசாயி ஆவேன். நான் என்னுடைய விளை பொருட்களை கோயம்புத்தூர் எம்.ஜி.ஆர் சந்தையில் விற்று வருகின்றேன். முன்பு, என்னுடைய விளைபொருளை வியாபாரிகளிடம் கொடுக்கும் போது அவர்கள் என்ன விலை கூறுகிறார்களோ அந்த விலையின் அடிப்படையிலேயே அளித்து வந்தேன். அதில் எனக்கு சில சமயம் லாபமாகவும் பல நேரங்களில் நஷ்டம் ஏற்பட்டதும் கூட உண்டு. உழைப்பதிற்கேற்ப பலன் இல்லை என்று பல நாட்கள் வருந்தி இருக்கின்றேன்.

ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்பு கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இருந்து சந்தை ஆய்வாளர் R.செல்லப்பாண்டியனை சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. அவர் என்னிடம் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் தினசரி சந்தை நிலவரத்தைப் பற்றிய விபரங்களை என்னிடம் கூறினார். மேலும் indg என்ற இணையதளம் மூலம் கொச்சின், பெங்களூரு உட்பட 13 சந்தைகளின் அனைத்து வியாபாரிகளின் பெயர் விலாசம் தொலைபேசி எண்ணை அறிந்து கொள்ள முடியும் என்று கூறினார். மேலும் ஒரு இனிய செய்தியாக கைபேசி வழியாக காய்கறிகளின் விலை நிலவரங்களை தினமும் குறுந்தகவல்கள் மூலம் இலவசமாக அனுப்பப்படுகிறது என்றும் விளக்கினார். முதலில் நான் நம்ப மறுத்தால் அவர் ஏற்கனவே ஒரு விவசாயிக்குச் சொல்லும் குறுந்தகவலை என்னிடம் காண்பித்தார்.

அதன் பிறகு நானும் என்னுடைய கைபேசி எண்ணை அவரிடம் அளித்தேன். நான் அவரிடம் தக்காளி விலை நிலவரத்தின் கோவை மற்றும் மேட்டுப்பாளையம் சந்தைகளின் விலை

நிலவரத்தை அனுப்புமாறு கூறினேன். நான் என்னுடைய எண்ணை அளித்த மறு நாளில் இருந்து எனக்குத் தகவல்கள் வர ஆரம்பித்தன.

அதில் இருந்து என்னுடைய விளை பொருட்களின் உண்மை நிலவரத்தினை அறிய முடிந்தது. அதன் பிறகு நான் வியாபாரிகள் கூறும் விலையை ஏற்காததோடு நானே விலையை முடிவு செய்து விற்பனை செய்து லாபமடைந்து வருகிறேன். இதனால் என்னுடைய குடும்பத்தார் அனைவரிடம் கூட மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

மேலும் இந்தத் திட்டத்தின் பயன்களை என்னுடன் இருக்கும் பல விவசாயிகளிடம் எடுத்துக் கூறி அவர்களும் பயன் அடைந்து வருகிறார்கள். இப்பொழுது இதன் மூலம் ஒரு காய்கறியின் விலைகளை மட்டுமே நாங்கள் அறிந்து கொள்ள முடிகிறது. இதே திட்டத்தின் அடிப்படையில் பல காய்கறிகளின் நிலவரங்களை எங்களுக்கு அளிக்க முடிந்தால் அது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு வேளாண்மைப் பல்கலைக்கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தத் திட்டத்தினை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கும் அதனைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்திட்டம் மென்மேலும் வளர வாழ்த்துகிறேன்.